
Vol. 7 No. 2
Chief Editor
Dr. M. Sadik Batcha
Advisory Editor
Dr. N. Chandra Segaran
Editorial Board
Dr. MAM. Rameez
Dr. R. Jeya Raman
Dr. M. Pandi
Dr. Aranga. Pari
Dr. A. Ra. Sivakumaran
Dr. A. Syed Zakir Hasan
Dr. Kumar
Dr. S. Easwaran
Dr. P. Jeyakrishnan
Dr. G. Veeramani
Dr. K. Narmatha
Dr. S. Balasubramanian
Dr. K. Vasudevan
Dr. F. Selvakumaran
Dr. T. Vishnu Kumaran
Dr. S. Rajendran
Dr. B. Sathiyamoorthy
Dr. Govindaraj
Dr. Kumara Selva
Dr. Senthil Prakash
Dr. R. Kurinchiventhan
Dr. Sr. Jeusin Francis
Dr. R. Rajalakshmi
Dr. R. Malarvizhi Mangayarkarasi
Dr. P. Ibrahim
Dr. K. Sirajudeen
Dr. T. Jegathesan
Dr. Pon. Kathiresan
Dr. M.H. Jahanara
Anbu Jaya
Dr. R. Tamilselvan
Mr. K. Saravanan
April - June 2019
ISSN : 2321 - 984X
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40720
நவீனத் தமிழாய்வு
Journal of
Modern Thamizh Research
(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)
Published by
RAJA PUBLICATIONS
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com
20

# சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பீட்டு நயக்கோட்பாடும் அதன் நடைமுறைச் சாத்தியப்பாடும்

கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா
சிரேஷ்ட விரிவுரையாளர் - வியாபாரப் பொருளியல்
முகாமைத்துவத் துறை, முகாமைத்துவ வர்த்தக பீடம்
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

உலகமயமாதல் பற்றி பேசப்படும் தற்காலத்தில் பண்டைய காலங்களைப் போலன்றி எந்தவொரு நாடும் தனித்து இயங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. உலகிலுள்ள எந்த ஒரு நாடும் தமது முழுத்தேவைகளையும் நிறைவு செய்யும் எல்லா வகைப் பொருட்களையும் உற்பத்தி செய்து கொள்ள முடிவதில்லை. இதன் காரணமாகவே தமக்கு இயலளவு கூடிய பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்வதன் மூலம், இயலளவு குறைந்த பொருட்களை ஏனைய நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்தும் கொள்கின்றன. இவ்வாறு நாடுகளுக்கிடையே பொருட்கள் சேவைகள் என்பவற்றினை பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்வினையே சர்வதேச வர்த்தகம் என்கின்றோம். உலக பொருளாதாரங்கள் கொண்டிருக்கின்ற உற்பத்தி இயலளவு வேறுபாடு, நாடுகள் கொண்டிருக்கின்ற காரணி கிடைப்பனவின் வேறுபட்ட தன்மை, வேறுபட்ட இறைக் கொள்கைகள், வேறுபட்ட பணம் என்பன சர்வதேச வர்த்தகத்தின் அவசியத்தை உணர்த்துகின்றன. சர்வதேச வர்த்தகத்தின் மூலம் உற்பத்தியாளர்கள், சமூகம், தேசம், உலகம் என்பனவற்றின் நலன்கள் உச்சப்படுத்தப்படும் போது இவ் வர்த்தகத்தின் மூலம் சில தீமைகள் ஏற்படுவதனையும் கண்டு கொள்ளலாம்.

சர்வதேச வர்த்தகத்தில் நாடுகள் இணைந்து கொள்வதற்கான காரணங்கள் என்ன? வர்த்தகத்தில் இணையும் நாடுகள் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் என்ன? வர்த்தகத்தின் மூலம் எவ்வாறு சமூக நலன்கள் உச்சப்படுத்தப்படுகின்றன? வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் எவ்வாறு சிறப்புத்தேர்ச்சி அடைகின்றன? என்பனவற்றையெல்லாம் விளக்குவதற்கு எடுகோளுடன் எழுந்த கோட்பாடுகளே சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள் ஆகும். இக்கோட்பாடுகள் காலத்திற்கு காலம் பல்வேறு பொருளியலாளர்களினால் முன்வைக்கப் பட்டுள்ளன. இவ் வகையில் வர்த்தகம் பற்றிய வணிக வாதிகளின் கருத்து, அடம்ஸ்மிதின் முழுநயக்கோட்பாடு, டேவிட் றிக்காடோவினால் முன்வைக்கப்பட்ட வர்த்தகம் பற்றிய ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு, ஹாபலரின் அமைய்ச செலவுக் கோட்பாடு, ஹெக்சர் - ஒலின் என்பவரினது காரணி அளிப்புக் கோட்பாடு என்பனவற்றினை தொட்டுக்காட்டலாம். இக்கோட்பாடுகள் ஒன்றிலிருந்து மற்றையது தோற்றம் பெற்றதாகும். உதாரணமாக முழுநயக்கோட்பாட்டிலிருந்த குறைபாட்டினை சுட்டிக்காட்டி டேவிட் றிக்காடோவினால் ஒப்பீட்டு நயக்கோட்பாடு முன்வைக்கப்பட்டது. பொதுவாக சர்வதேச வர்த்தகம் பற்றி எழுந்த கோட்பாடுகளுள் ஒப்பீட்டு நயக்கோட்பாடும், காரணி அளிப்புக் கோட்பாடும் வர்த்தகத்தினை விளக்குவதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

ஒப்பீட்டு நயக் கோட்பாடு என்பது ஒரு நாடு எப்பொருளில் ஒப்பீட்டு நயம் கூடுதலாக இருக்கின்றதோ அப்பொருளை ஏற்றுமதி செய்து மற்றைய பொருளினை இறக்குமதி செய்வதனைக் குறிக்கும். இதன்படி இரு நாடுகள் கட்டற்ற வர்த்தகத்தில் இக் கோட்பாட்டின் எடுகோள்களுக்கு இணங்க இரண்டு நாடுகளிலும், இரண்டு பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டு,

# சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பீட்டு நயக்கோட்பாடும் அதன் நடைமுறைச் சாத்தியப்பாடும்

**கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா**

சிரேஷ்ட விரிவுரையாளர் - வியாபாரப் பொருளியல்
முகாமைத்துவத் துறை,
முகாமைத்துவ வர்த்தக பீடம்
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

உலகமயமாதல் பற்றி பேசப்படும் தற்காலத்தில் பண்டைய காலங்களைப் போலன்றி எந்தவொரு நாடும் தனித்து இயங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. உலகிலுள்ள எந்த ஒரு நாடும் தமது முழுத்தேவையையும் நிறைவு செய்யும் எல்லா வகைப் பொருட்களையும் உற்பத்தி செய்து கொள்ள முடிவதில்லை. இதன் காரணமாகவே தமக்கு இயலளவு கூடிய பொருட்களை அதிளவில் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்வதன் மூலம், இயலளவு குறைந்த பொருட்களை ஏனைய நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்தும் கொள்கின்றன. இவ்வாறு நாடுகளுக்கிடையே பொருட்கள் சேவைகள் என்பவற்றினை பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்வினையே சர்வதேச வர்த்தகம் என்கின்றோம். உலக பொருளாதாரங்கள் கொண்டிருக் கின்ற உற்பத்தி இயலளவு வேறுபாடு, நாடுகள் கொண்டிருக்கின்ற காரணி கிடைப்பனவின் வேறுபட்ட தன்மை, வேறுபட்ட இறைக் கொள்கைகள், வேறுபட்ட பணம் என்பன சர்வதேச வர்த்தகத்தின் அவசியத்தை உணர்த்துகின்றன. சர்வதேச வர்த்தகத்தின் மூலம் உற்பத்தியாளர்கள், சமூகம், தேசம், உலகம் என்பனவற்றின் நலன்கள் உச்சப்படுத்தப்படும் போது இவ் வர்த்தகத்தின் மூலம் சில தீமைகள் ஏற்படுவதனையும் கண்டு கொள்ளலாம்.

சர்வதேச வர்த்தகத்தில் நாடுகள் இணைந்து கொள்வதற்கான காரணங்கள் என்ன? வர்த்தகத்தில் இணையும் நாடுகள் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் என்ன? வர்த்தகத்தின் மூலம் எவ்வாறு சமூக நலன்கள் உச்சப்படுத்தப்படுகின்றன? வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் எவ்வாறு சிறப்புத்தேர்ச்சி அடைகின்றன? என்பன வற்றையெல்லாம் விளக்குவதற்கு எடுகோளுடன் எழுந்த கோட்பாடுகளே சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள் ஆகும். இக்கோட்பாடுகள் காலத்திற்கு காலம் பல்வேறு பொருளியலாளர்களினால் முன்வைக்கப் பட்டுள்ளன. இவ் வகையில் வர்த்தகம் பற்றிய வணிக வாதிகளின் கருத்து, அடம்ஸ்மிதின் முழுநயக்கோட்பாடு, டேவிட் றிக்காடோவினால் முன்வைக்கப்பட்ட வர்த்தகம் பற்றிய ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு, ஹாபலரின் அமையச செலவுக் கோட்பாடு, ஹெக்சர் - ஓலின் என்பவரினது காரணி அளிப்புக் கோட்பாடு என்பனவற்றினை தொட்டுக்காட்டலாம். இக்கோட்பாடுகள் ஒன்றிலிருந்து மற்றையது தோற்றம் பெற்றதாகும். உதாரணமாக முழுநயக்கோட்பாட்டிலிருந்த குறைபாட்டினை சுட்டிக்காட்டி டேவிட் றிக்காடோவினால் ஒப்பீட்டு நயக்கோட்பாடு முன்வைக்கப்பட்டது. பொதுவாக சர்வதேச வர்த்தகம் பற்றி எழுந்த கோட்பாடுகளுள் ஒப்பீட்டு நயக்கோட்பாடும், காரணி அளிப்புக் கோட்பாடும் வர்த்தகத்தினை விளக்குவதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

ஒப்பீட்டு நயக் கோட்பாடு என்பது ஒரு நாடு எப்பொருளில் ஒப்பீட்டு நயம் கூடுதலாக இருக்கின்றதோ அப்பொருளை ஏற்றுமதி செய்து மற்றைய பொருளினை இறக்குமதி செய்வதனைக் குறிக்கும். இதன்படி இரு நாடுகள் கட்டற்ற வர்த்தகத்தில் இக் கோட்பாட்டின் எடுகோள்களுக்கு இணங்க இரண்டு நாடுகளிலும், இரண்டு பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டு, சிறப்புத்தேர்ச்சி அடைவதன் மூலமும், (அட்டவணை 1 விளக்குகின்றது) பரிமாற்றத்தால் கிடைக்கும் நன்மைகள் மூலமும் இரு நாடுகளினதும் சமூக நலன்கள் உச்சப்படுத்தப்படுகின்றன.

**அட்டவணை 1**

| நாடு | X | Y | சர்வதேச வர்த்தகத்தி-ற்கு முன்னர் | சர்வதேச வர்த்தகத்தி-ற்குப் பின்னர் |
|---|---|---|---|---|
| A | 120 | 60 | 180 | 240 |
| B | 20 | 40 | 60 | 80 |
| | 140 | 100 | 240 | 320 |

ஒரு அலகு ஊழியம் பயன்படுத்தப்படுகின்றது.(எடுகோள்)

மேலுள்ள அட்டவணை 1 இன் படி A, B ஆகிய இரு நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் போது ஒப்பீட்டுச் செலவு குறைவான பண்டம் உற்பத்தி செய்யப்படும் போது ஊழியத்தை முழுமையாக குறிப்பிட்ட நாடு குறிப்பிட்ட பண்டம் நோக்கி பயன்படுத்துவதனால் குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தி இரட்டிப்படைகின்றது. இதன் காரணமாக சிறப்புத்தேர்ச்சி ஏற்பட்டு உற்பத்தியும் அதிகரிக்கின்றது. வர்த்தக பரிமாற்றத்தால் கிடைக்கும் நன்மைகளினால் அதிகளவு பொருட்களை இறக்குமதி செய்யலாம். எனவே ஒப்பீட்டு நயக்கோட்பாடு சிறப்புத் தேர்ச்சி மூலம் சமூக நலன்கள் உச்சப்படுத்தப்படுவதனையும், பரிமாற்றத்தால் கிடைக்கும் நன்மைகள் மூலமாகவும் மக்களின் நுகர்வு அதிகரித்து சமூக நலன்கள் உச்சப்படுத்தப்படுவதனையும் விளக்கி நிற்கின்றன. இந்நிலைமையை கோட்பாட்டு மாதிரியுருவினால் வரைபடங்களை பயன்படுத்தி மேலும் மிகவும் தெளிவாக விளக்கலாம்.

கட்டற்ற வர்த்தகத்தின் கீழ் கோட்பாட்டு மாதிரியுருவின் மூலம் எவ்வாறு இரு நாடுகளிலும் உற்பத்தி அதிகரித்து, சிறப்புத்தேர்ச்சி அடைந்து சமூக நலன்கள் உச்சப்படுத்தப்படுகின்றன. என்பதனை நோக்குவொமாயின், இக் கோட்பாடு பின்வரும் சில எடுகோள்களின் அடிப்படையில் விளக்கப் படுகின்றது.

1. இரண்டு நாடுகளே பொருளாதாரத்தில் காணப்படுகின்றன.

   A - நாடு, B – நாடு

2. இரண்டு பொருட்கள் மட்டுமே உற்பத்தி செய்யப் படுகின்றன. அவை X, Y ஆகியன.

3. உற்பத்தியில் ஒரு உரு உற்பத்திக் காரணி மட்டுமே (L) பயன்படுத்தப்படுகின்றன.

4. ஊழியம் ஓரினத்தன்மை வாய்ந்தது.

5. உற்பத்திக் காரணி நாட்டிற்குள் அசையும். ஆனால் நாடுகளுக்கிடையில் அசையமாட்டாது.

6. A, B நாடுகளில் சுவையில் மாற்றமில்லை.

7. இரு நாடுகளிலும் ஊழிய நிரம்பலில் மாற்றமில்லை

8. பொருட்களின் விலை ஊழியச் செலவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

9. மாறா அளவுத்திட்டம் செயற்படுகின்றது.

10. பண்டமாற்று அடிப்படையில் நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் இடம்பெறுகின்றது.

11. A, B நாடுகளில் தொழிநுட்பம் மாற்றம் அடையவில்லை.

12. நாடுகளுக்கிடையே கட்டற்ற வர்த்தகம் காணப்படுகின்றது. இதனால் A, B நாடுகளுக்கிடையில் வர்த்தகத் தடைகள் எதுவுமில்லை.

13. நாடுகள் A, B என்பவற்றிற்கிடையே வர்த்தகத்தில் போக்கு வரத்துச் செலவுகள் இல்லை.


14. இரு நாடுகளிலும் நிறை தொழில் மட்டம் காணப்படுகின்றது.

எனவே மேற்கூறப்பட்ட சில எடுகோள்களுடனும், நுண்ணினப் பொருளியல் கருவிகளான உற்பத்திசாத்திய வளையி, சார்பு விலைக்கோடு, சமபயன் வளையி என்பவற்றினையும் பயன்படுத்தி கட்டற்ற வர்த்தகத்தில் ஈடுபடும் போது எவ்வாறு உற்பத்தி அதிகரித்து சிறப்புத் தேர்ச்சியடைந்து சமூக நலன்கள் அதிகரிப்பதனை வரைபட ரீதியாக நோக்குவோமாயின்,

**மூடிய பொருளாதாரம் அல்லது சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர்**

A என்ற ஒரு நாட்டில்,

**வரைபடம் - 1**




**இந்நாட்டில் சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர்**


X பொருளில் $OX_1$ அளவும்

YபொருளிலI $OY_1$ அளவும் உற்பத்தியும் நுகர்வும் நடை பெறுகின்றது. இங்கு குறைந்த செலவில் Xபொருள் உற்பத்தி செய்யப்படுகின்றது எனக்கொள்வோம். இதன் பின்னர் இந்நாடு திறந்த பொருளாதாரத்திற்கு பின்னர் அல்லது சர்வதேச வர்த்தகத்திற்கு பின்னர் Xபொருளின் விலை அதிகரிப்பால் உற்பத்தியானது Xபொருள் குறித்து அதிகரிக்கும்.

## திறந்த பொருளாதாரம் அல்லது சர்வதேச வர்த்தகத்திற்கு பின்னர்

A என்ற ஒரு நாட்டில்,

**வரைபடம் 2**




வரைபடம் 2 இன் படி

**இந்நாட்டில் சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர்**

உற்பத்தி X பொருள் குறித்து $Ox_1$ ஆகவும்

Y பொருள் குறித்து $Oy_1$ ஆகவும் காணப்பட்டது.

இங்கு நுகர்வானது,

X பொருள் குறித்து $Ox_1$ ஆகவும்

Y பொருள் குறித்து $Oy_1$ ஆகவும் காணப்பட்டது.

ஆனால் **சர்வதேச வர்த்தகத்தின் பின்னர்**

Xஇன் உற்பத்தியானது $OX_2$ ஆகவும்

Xஇன் நுகர்வானது $OX_3$ ஆகவும் காணப்பட்டது.


$X_2$ - $X_3$ / L – $Q_1$ ஏற்றுமதி.

Y இன் உற்பத்தி $OY_2$

Y இன் நுகர்வு $OY_3$

$Y_2 – Y_3$ / L – Z இறக்குமதியாகும்.

இந்நாட்டின் வர்த்தக முக்கோணம் = $Q_1LZ$





வர்த்தக மாற்று வீதம் = $Q_1 – Z$

**வர்த்தகத்தால் ஏற்பட்ட விளைவு** :

1. நுகர்வு அதிகரித்துள்ளது. $CIC_1$ - $CIC_2$ வாக அதிகரிப்பு
2. Xஇன் உற்பத்தி அதிகரித்துள்ளது. $Q_1$ $Q_2$ ஆக அதிகரித்துள்ளது.

## இரு நாடுகள் கொண்ட கோட்பாட்டு மாதிரியுரு

**வரைபடம் - 3**




வரைபடம் 3 இன்படி, இங்கு,

A, B - என்பன இருநாடுகள்

X, Y - என்பன இரு பொருட்கள்

X - ஏற்றுமதி

Y - இறக்குமதி

Q - A நாட்டின் உற்பத்தி

$Q_2$ - A நாட்டின் உற்பத்தி

$Q_1$ - B நாட்டின் உற்பத்தி

$Q_3$ - B நாட்டின் உற்பத்தி

Z – A - நாட்டின் நுகர்வு

$Z_1$ – B - நாட்டின் நுகர்வு

$CIC_1$ - சமபயன் வளையி

$CIC_2$ - சமபயன் வளையி

$CIC_3$ - சமபயன் வளையி

PdA - A நாட்டின் உள்நாட்டு சார்பு விலை

PdB - B நாட்டின் உள்நாட்டு சார்பு விலை

PwA - A நாட்டின் சர்வதேச சார்பு விலைக்கோடு

PwB - B நாட்டின் சர்வதேச சார்பு விலைக்கோடு

(PwA, PwB என்பன ஒன்றுக்கொன்று சமாந்தரமாக காணப்படுகின்றன)

மேலே காட்டப்பட்ட இரு நாடுகளின் மாதிரியுருவின் மூலம் எவ்வாறு உற்பத்தி அதிகரித்து சிறப்புத் தேர்ச்சி அடைந்து சமூக நலன்கள் உச்சப்படுத்தப்படுகின்றன என்பதனை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு இரு நாடுகளிலும் சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னுள்ள நிலைமைகள், சர்வதேச வர்த்தகத்திற்கு பின்னுள்ள நிலைமைகள் என்பனவற்றினை அறிதல் வேண்டும்.

1. சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் X பொருளில் A நாடும், Y பொருளில் B நாடும் ஒப்பீட்டு நயத்தை அனுபவித்தது.
2. சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் A நாடு, Xபொருளில் $X_1$ அளவுகளையும் Y பொருளில் $Y_1$ அளவுகளையும் உற்பத்தி செய்தது.
3. சர்வதேச வரத்தகத்திற்கு முன்னர் B நாடு Y பொருளில் $Y_2$ அளவுகளையும் X பொருளில் $X_2$ அளவுகளையும் உற்பத்தி செய்தது.
4. சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் A நாட்டின் உற்பத்தி Q புள்ளியிலும், B நாட்டின் உற்பத்தியானது $Q_1$ புள்ளியிலும் உற்பத்தி செய்யப்படுகின்றது.
5. சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் உள்நாட்டு சார்பு சார்பு விலைக்கோடு இரு நாட்டிலும் PdA, PdB ஆக காணப்படுகின்றது
6. A, B ஆகிய இரு நாடுகளிலும் சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் சமபயன் வளையியானது $CIC_1$ ஆக காணப்படுகின்றது.

இந்நிலைமையில் இக்கோட்பாட்டு மாதிரியுருவிற்கு கையாண்ட எடுகோள்களின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகம் நடைபெறுகின்றது. எனக்கொண்டால் வரைபடம் 3 இன்படி சர்வதேச வர்த்தகத்திற்கு பின்னர் உள்ள நிலைமைகளை நோக்குவோமாயின் :

- A,B ஆகிய நாடுகளின் உற்பத்தி சர்வதேச வர்த்தகத்திற்கு பின்னர் சார்பளவில் அதிகரித்துள்ளது. A நாடு ஒப்பீட்டு நயத்தினை X பொருளில் அனுபவிக்கின்றது. இதனால் இதன் உற்பத்தி Qவிலிருந்து $Q_2$ ஆகவும் அதிகரிக்கின்றது. இதே போல் Q நாடு ஒப்பீட்டு நயத்தினை Y பொருளில் அனுபவிக்கின்றது. இதனால் இதன் உற்பத்தி $Q_1$ இலிருந்து $Q_3$ ஆகவும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் A நாடு X பொருள் குறித்து $X_3$ அளவுகளையும் B நாடு Y பொருள் குறித்து $Y_4$ அளவுகளையும் உற்பத்தி செய்கின்றன.

- A, B நாடுகளில் ஒப்பீட்டு நயம் அனுபவித்த பொருட்களில் உற்பத்தி அதிகரிப்பால் ஏற்றுமதி அதிகரிக்கின்றன.

  A நாடு X பொருள் குறித்து M ___ $Q_2$ அளவுகளையும்
  B நாடு Y பொருள் குறித்து $M_1$ ___ $Q_3$ அளவுகளையும்

  ஏற்றுமதி செய்கின்றன.

எனவே இரு நாடுகளும் ஒப்பீட்டு நன்மை அனுபவித்த பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன் ஒப்பீட்டு நன்மையை அனுபவிக்காத பொருட்களை இறக்குமதி செய்கின்றன.

- A நாடு Y பொருள் குறித்து M ___ Z அளவுகளையும்
  B நாடு X பொருள் குறித்து $M_1$ ___ $Z_1$ அளவுகளையும்

  இறக்குமதி செய்கின்றன. எனவே சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் சார்பு விலைகளை குறைத்துள்ளதனால்

  A நாட்டின் ஏற்றுமதி = B நாட்டின் இறக்குமதி

  $M \quad Q_2 = M_1 \quad Z_1$

  B நாட்டின் ஏற்றுமதி = A நாட்டின் இறக்குமதி

  $M_1 \quad Q_3 = M \quad Z$

- சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் A நாட்டின் சர்வதேச விலைக்கோடு PwA ஆகவும், B நாட்டின் சர்வதேச விலைக்கோடு PwB ஆகவும் காணப்படுகின்றது. இச் சர்வதேச விலைக்கோடு இரு நாடுகளுக்கும் பொதுவானது. எனவே குறிப்பிட்ட பொருளைப் பொறுத்தவரை இரு நாடுகளும் ஒரே விலையைக் கொண்டு காணப்படும். இதனால் பரிமாற்று வீதம் குறிப்பிட்ட பண்டத்திற்கு சமனாக இருக்கும்.

- மாதிரியுருவின் படி A, B நாடுகளின் சாதனங்கள் மறுபங்கீடு செய்யப்படுகின்றன. அதாவது A நாடு Xபொருள் உற்பத்திக்காக Q ___ $Q_2$ ஆகவும், B நாடு Y பொருளின் உற்பத்திக்காக சாதனங்களை $Q_1$ ___ $Q_3$ ஆகவும் மறுபங்கீடு செய்யப் படுகின்றது.

- சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் A நாட்டின் வர்த்தக முக்கோணம் B நாட்டின் வர்த்தக முக்கோணத்திற்கு சமனானதாக இருக்கும்.

A நாட்டின் வர்த்தகமுக்கோணம் = Bநாட்டின் வர்த்தகமுக்கோணம்

$$Q_2MZ = Q_3M_1Z_1$$

- அருமையாகக் காணப்பட்ட பொருட்களின் அருமைத் தன்மையானது சர்வதேச வர்த்தகத்தினால் குறைகின்றது. அதாவது ஆரம்பத்தில் A நாட்டிற்கு Y பொருளும், B நாட்டிற்கு X பொருளும் அருமையாகக் காணப்பட்டது. ஆனால் சர்வதேச வர்த்தகததின் பின்னர் குறைந்த விலையில் பண்டத்தின் இறக்குமதி அதிகரிக்கப் பட்டதனால் சமூகத்தில் கூடுதலான பொருட்கள் நுகரப்பட்டு, அருமைத்தன்மையானது சார்புரீதியாக குறைவதனால் சமூகத்தின் நலன்கள் உச்சப்படுத்தப்படுவதற்கு இது இட்டுச்செல்லும்.

- சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் ஒப்பீட்டு நயத்தை அனுபவிக்காத பொருட்களின் விலை வீழ்ச்சி அடையும். இதன் காரணமாக கேள்வி அதிகரித்து, சமூகத்தின் நுகர்வு அதிகரிக்கின்றது. இதன் காரணமாக இறக்குமதி அதிகரிக்கின்றது. இவ்வாறு இறக்குமதி அதிகரித்து சமூக நுகர்வு உச்சப்படுத்தும் செயன்முறையையே இக்கோட்பாட்டு மாதிரியுரு விளக்கி நிற்கின்றது. இதனை இவ்வரைபில் சமூக சமநோக்கு வளைகோடுகள் விளக்குகின்றன. அதாவது சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் சமூக சமநோக்கு வளைகோடு ஆனது A, B ஆகிய இரு நாடுகளிலும் $CIC_1$ ஆகவே காணப்பட்டது. ஆனால் சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் A,B ஆகிய இரு நாடுகளிலும் நுகர்வு அதிகரித்து இச் சமூக சமநோக்கு வளையி அதிகரித்து இருப்பதனை கோட்பாட்டு மாதிரியுரு தெளிவாக விளக்கி நிற்கின்றது.

- சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் A நாட்டின் சமூக சமநோக்கு வளையி $CIC_1$ இலிருந்து $CIC_2$ ஆக சமூக நலன் உச்சப்படுத்தப்பட்டுள்ளது.

- சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் B நாட்டின் சமூக சமநோக்கு வளையி $CIC_1$ இலிருந்து $CIC_3$ ஆக சமூக நலன்கள் உச்சப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே சர்வதேச வர்த்தகத்தின் பின்னர் இரு நாட்டிலும் உற்பத்தி அதிகரித்து சமூக நலன்கள் உச்சப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை வரைபடரீதியாக கண்டு கொள்ளலாம்.

சர்வதேச வர்த்தகத்தில் இரு பொருள் உற்பத்தியிலும் ஒரே நாடே இயலளவினைப் பெற்றிருக்கும் போதும், குறைவிருத்தி நாடுகளின் சர்தேச வர்த்தகத்தை விளக்குவதற்கும் அடம்ஸ்மித்தின் முழுநன்மைக்கோட்பாடு பொருத்தமான ஒன்றாக காணப்படவில்லை. இக்குறைபாட்டினை கருத்திற் கொண்டு இதனை நீக்கும் முகமாக டேவிட் றிக்காடோ வினால் ஒப்பீட்டு நயக்கோட்பாடு முன்வைக்கப்பட்டது. அதன் பின்னர் John Stuart Mill, Cairnes, Bastable என்பவர்களினால் திருத்தி அமைக்கப்பட்டது. இதன் பின்னர் Taussing, Haberler என்பவர்களினால் இக்கோட்பாடு சிறந்த முறையில் வெளிப் படுத்தப்பட்டது. ஒப்பீட்டு நயக்கோட்பாடு என்பது குறிப்பிட்ட அளவு உற்பத்தி காரணியாகக் கொண்டு குறிப்பிட்ட நாடு எந்தப் பொருளை குறைந்த செலவில் உற்பத்தி செய்கின்றதோ, அந்நாடு அந்தப்பொருளின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று அதனை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தல் வேண்டும். எந்தப் பொருளில் ஒப்பீட்டு நயம் இன்மையை அனுபவிக்கின்றதோ அந்தப் பொருளை இறக்குமதி செய்ய வேண்டும் என்பதனையே இக்கோட்பாட்டு விளக்கம் தருகின்றது. மேலும் ஒரு

நாட்டுடன் இன்னொரு நாட்டினை ஒப்பிடும் போது காலநிலை மாற்றம், இயற்கை வளங்கள், புவியியல் அமைப்பு, பௌதீக அமைப்பு மாற்றம் ஆகியவற்றினால் ஒரு நாடு இன்னொரு நாட்டினை விட ஒரு பொருளை உற்பத்தி செய்கின்றது. எனவே ஒப்பீட்டு நயத்தை பெறும் வகையில் ஒவ்வொரு நாடும் சிறப்புத்தேர்ச்சியடைதல் வேண்டும். இவ்வாறு சிறப்புத் தேர்ச்சி அடைவதன் மூலம் நாடுகளின் உற்பத்தி அதிகரிப்பதுடன் உலகத்து உற்பத்தியும் அதிகரிக்கும்.

இக்கோட்பாடு ஆனது முதலாவது உலக மகாயுத்தம் வரைக்கும் ஒரு நூற்றாண்டிற்கு மேலாக ஆதிக்கம் செலுத்தியது. எனினும் இக்கோட்பாடு பல விமர்சனத்திற்குள்ளாகியும் தற்போதும் பொருளியலாளர்கள் சர்வதேச வர்த்தகத்தினை விளக்குவதற்கு இதனை பின்பற்றுகின்றனர். பேராசிரியர் சாமுவேல்சனின் (Professor Samuelson) இன் கருத்துப்படி பெண்கள் அழகு ராணிப் போட்டிகளில் வெற்றிபெறுவதுபோல ஒப்பீட்டு நயக்கோட்பாடும் தர்க்கரீதியாக பெறுமதியான கட்டமைப்பை உடையது என்றும், நாடுகள் இக்கோட்பாட்டினை பின்பற்றத் தவறின் பல பெறுமதிகளை இழக்க நேரிடும் என குறிப்பிடுகின்றனர். எவ்வாறெனினும் வர்த்தகத்தினை விளக்குவதற்கு பொதுவான கோட்பாடாக ஒப்பீட்டு நயக் கோட்பாடு காணப்பட்ட போதிலும் எடுகோள்கள் யதார்த்தமற்ற தன்மையிலிருந்து தோற்றம் பெற்றதனாலும், மெய்யுலக நிலைமை களுக்கு இக்கோட்பாட்டின் பிரயோகத்தன்மை குறித்தும் பல வாதப் பிரதிவாதங்கள் உருவாவதற்கு வழிவகுத்தது. இவ்வகையில் "Bertin Ohlin, Frank D. Graham" போன்றவர்கள் இக்கோட்பாட்டினை விமர்சனம் செய்தனர். இக் கோட்பாட்டின் எடுகோள்கள் ஏற்கனவே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

ஒப்பீட்டு நயக்கோட்பாட்டின் எடுகோளினை நடைமுறைச் சாத்தியம் பற்றி விமர்சனரீதியாக பரிசீலனை செய்வோமாயின், ஒப்பீட்டு நயக்கோட்பாடு ஆனது பொருளாதார அறிஞர்கள் பலர் புறக்கணித்துள்ள மதிப்புப் பற்றிய உழைப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கோட்பாட்டு விளக்கத்தின் பிரதான எடுகோளாகவும் ஊழியச் செலவு காணப்படுகின்றது. உற்பத்திச் செலவினைக் கணிப்பிடுவதில் தனியான ஊழியத்திற்கான செலவினை மட்டுமே கருத்திற் கொள்கின்றது. எனவே இவ் எடுகோள் நடைமுறை உலகில் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். இன்று உலகில் சில நிறுவனங்கள் அல்லது நாடுகள் பெருமளவில் முதலீட்டினை அடிப்படையாக கொண்டு இயங்குகின்றன. உதாரணமாக கார் உற்பத்தியை எடுத்துக்கொள்ளலாம். ஊழியச் செறிவான உற்பத்திக்கு ஊழியச் செலவு அதிகமாகவும், மூலதனச் செறிவான உற்பத்திக்கு ஊழியச் செலவு குறைவானதாகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. மேலும் நிறுவனத்திற்கு நிறுவனம் உற்பத்திக் காரணிகளின் இணைப்புத் தன்மையானது வேறுபட்டுக்காணப்படுகின்றது. சில நாடுகளில் தொழில் நுட்பத்தில் தங்கியதாகவே காணப்படுகின்றன. சில பொருட்களின் உற்பத்தியில் உயர்ந்த மூலதனம் பயன்படுத்தப்படும் போது அப்பொருளின் உற்பத்திச் செலவில் பாரியளவில் மூலதனமே காணப்படுகின்றது. மேலும் ஊழியத்திற்கான செலவினை மட்டும் வைத்து பொருளுக்கான விலையை கணிப்பிட முடியாது. ஏனெனில் கனடா குளிரான நாடு. இதே போல் பிரேசில் புழுக்கமான நாடாகும். இதனால் இரு நாட்டிலும் ஊழிய அலகு வித்தியாசப் படுகின்றன. ஊழியம் மணித்தியாலத்திற்கு வேறுபடும். எனவே நடைமுறை உலகில் இதன் கணிப்பீடு தவறானதாகவே

தென்படுகின்றது. இதுபற்றி ''Marchal'' விமர்சிக்கும் போது விற்பனை பொருளின் உற்பத்திச் செலவில் ஊழியம், மூலதனம் என்பன சேர்த்துக்கொள்ளப்பட்டால் மேற்கூறப்பட்ட பிரச்சினைக்கான பிரதிகூலம் தவிர்க்கப்படலாம் என்கின்றார். ''Harberler'' என்பவர் வர்த்தகக் கோட்பாட்டுக்குள் சந்தர்ப்ப செலவு என்னும் எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பு பெறலாம் என்கின்றார். இது பற்றி ''ஹெக்சர் _ ஒலின்'' என்பவர்களது விளக்கத்தின் படி ஒரு நாடு எந்த உற்பத்திக் காரணியை அதிகமாகப் பயன்படுத்தி உற்பத்தி செய்கின்ற பொருளை ஏற்றுமதி செய்ய வேண்டும். எந்த உற்பத்திக் காரணியை குறைவாகக் கொண்டுள்ளதோ அதை மற்றைய நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்கின்றார். ''Taussing'' என்பவர் தொழிநுட்பம் மாறாமல் இருக்கும் போது ஊழியம் மட்டும் உற்பத்திக்கு பொருத்தமானது என்றும், ஊழியமே கூடுதலாக உற்பத்திக்கு செல்வாக்கு செலுத்தும் என ஒப்பீட்டு நயக் கோட்பாட்டிற்கு ஆதரவான கருத்தினை முன்வைக்கின்றார். ஆனால் இக்கருத்து மெய்யுலகில் சாத்தியம் அற்றதாக அமைகின்றது. ஏனெனில் அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளில் ஊழியத்தினை விடவும் நடைமுறையில் இன்று தொழிநுட்பம் உற்பத்தியில் செல்வாக்கு செலுத்தி நிற்பதனைக் காணலாம். மேலும் இன்று உற்பத்தியில் மூலதனம், நிலம், வட்டிவீதம் என்பன பங்களிப்புச் செய்வதனைக் கண்டு கொள்ளலாம்.

ஊழியர்கள் ஓரினத்தன்மை என்ற எடுகோள் நடைமுறை உலகிற்கு புறம்பானதே ஆகும். அதாவது மெய்யுலகில் ஊழியர்கள் ஓரினத்தன்மையானவர்கள் அல்ல. (Labour is not Hamogeneous) ஏனெனில் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் ஊழிய அலகுகள் கல்வி, பயிற்சி, உடல், இயலளவு, உளரீதியாக வேறுபடக்கூடியவை. ஏனவே உலகம் பூராகவும் ஊழியர்கள் ஒரே தன்மையற்றுக் காணப்படுகின்றனர். இதன் காரணமாக கூலி வித்தியாசம் குறுங்காலத்தில் கூடுதலாக காணப்படுகின்றது. இது பொருட்களிடையே உள்நாட்டு, வெளிநாட்டு பரிமாற்று வீதத்தில் தாக்கம் செலுத்துகின்றது.

இக்கோட்பாட்டில் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளது சுவை மாறாததாக கருதப்படுகின்றது. எனினும் தனிநபர் ரீதியாகவும், நாடுகள் ரீதியாகவும், பொருட்கள் ரீதியாகவும் சுவை வேறுபடக்கூடியது. மேலும் வருமானம், காலநிலை, பொருளாதார அபிவிருத்தி, வர்த்தக உறவுகள் என்பனவும் இன்று சுவையினை நிர்ணயிக்கும் காரணிகளாக அமைவது இவ்வெடுகோளின் சாத்தியப்பாடு குறைகின்றது.

இக்கோட்பாட்டின்படி உற்பத்தியில் மாறா அளவுத்திட்ட விளைவு விதி தொழிற்படுகின்றது. ஆனால் நடைமுறையில் மாறா அளவுத்திட்ட விளைவு விதி தொழிற்படுவது சாத்தியமற்ற ஒன்றே. (Unrealistic Assumption of Constant Cost) எனலாம்.. அதாவது உற்பத்தி நடவடிக்கையில் கூடிச் செல்லும் அளவுத்திட்ட விளைவுவிதியோ அல்லது குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி தொழிற்படமாட்டாது. உற்பத்தி அதிகரிப்பும், விலை அதிகரிப்பும் மாறா வேகத்தில் காணப்படும் என்பதே இக் கோட்பாட்டின் எடுகோள்களில் ஒன்று. ஆனால் A நாடு X பொருளினை மட்டும் அல்லது B நாடு Y பொருளினை மட்டும் உற்பத்தியை அதிகரிப்பது நடைமுறையில் காணமுடியாது. உண்மையில் நடைமுறையில் ஒப்பீட்டு நயம் இல்லாத பொருளை பூரணமாக உற்பத்தி செய்யாமல் விடுவதில்லை.

ஒரு சிறு பகுதியை உற்பத்தியும், மறுபகுதியை இறக்குமதியும் செய்கின்றன. ஆனால் கூடிச் செல்லும் அளவுத்திட்ட விதி செயற்பட்டாலும் வெளிநாட்டு வர்த்தகத்தில் சாத்தியக் கூறுகள் இருக்கலாம்.

இக்கோட்பாட்டு விளக்கம் நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் போக்குவரத்துச் செலவு புறக்கணிக்கப்படுகின்றது. ஆனால் நடைமுறை வர்த்தக நடவடிக்கைகளில் போக்குவரத்து செலவு என்பது முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதனால் பொருட்களின் விலையினைத் தீர்மானிப்பதிலும் போக்குவரத்து செலவு என்பது உள்ளடக்கப்படுகின்றது. சர்வதேச வர்த்தகத்தின் போக்கு அதன் அளவு என்பனவற்றைத் தீர்மானிப்பது போக்குவரத்து செலவாகும். சில பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி போக்குவரத்து செலவு உற்பத்திப் பொருட்களில் சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்யும் நாடுகளே அதனைப் பொறுப்பேற்க வேண்டும் என்கின்றனர். எனவே போக்குவரத்து செலவானது உற்பத்தியுடன் சேர்க்கப்பட்டால் உற்பத்தியினை தீர்மானிக்கும் காரணியாகவும் போக்குவரத்து செலவு அமைகின்றது. இதற்கு சான்றாக 19ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஜேர்மனியானது இயற்கையாகவே நிலக்கரியை உற்பத்தி செய்யும் நாடாக இருந்தும் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்து மீண்டும் ஏற்றுமதி செய்தது. மேலும் இன்று நடைமுறையில் பல நாடுகளில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யப்படும் நடவடிக்கையானது சர்வதேச வர்த்தகத்தின் போக்கை போக்குவரத்து செலவு தீர்மானிப்பதனை கண்டு கொள்ளலாம்.

உள்நாட்டில் காரணி நகர்வானது பூரண அசைவுடையது என்ற இக்கோட்பாட்டின் விளக்கம் இக்கோட்பாட்டின் தெளிவற்ற தன்மையினைச் சுட்டி நிற்கின்றது. நடைமுறையல் தொழில்களுக்குள்ளாகவும், நிறுவனங்களுக் குள்ளாகவும், அல்லது உள்நாட்டில் பிரதேசத்திற்கு பிரதேசமோ காரணியின் பூரண அசைவு சாத்தியமற்றதாகும். ஏனெனில் அவர்கள் ஒன்றிலேயே சிறப்புத் தேர்ச்சி அடைந்திருப்பர். (உதாரணமாக இலங்கையில் மல்வானை - றம்புட்டான் உற்பத்தி, புத்தளம் - உப்பு உற்பத்தி) எனவே இரண்டு பிரதேசங்களுக்கிடையிலான உற்பத்திக்காரணிகள் நாட்டிற்குள் அசையமாட்டாது. இது பற்றிய "Bertin Ohlin" பின்வருமாறு. இக்கோட்பாட்டினை விமர்சிக்கின்றார். அதாவது ஒப்பீட்டு நயக்கோட்பாடு சர்வதேச வர்த்தகத்திற்கு மட்டும் உரியதல்ல. மாறாக நாட்டிற்குள் பிரதேசத்திற்கு பிரதேசங்கள் நடைபெறும் வர்த்தகத்திற்கும் பொருத்தமானது என்றும், ஊழிய நகர்வு நாடுகளுக்கிடையில் மாத்திரம் அன்றி உள்நாட்டிலும் அசைய முடியாது. ஏனெனில் நாடுகளுக்கிடையில், பிரதேசங்களுக்கிடையில் ஊழியக் கொடுப்பனவு, வட்டிவீதம் என்பன வேறுபட்டுக் காணப்படும் என்கின்றார்.

இரு நாடுகள், இரு பொருட்கள் என்ற கோட்பாட்டு எடுகோள் சர்வதேச வர்த்தகத்தில் சாதகம் அற்ற தன்மையினையே வெளிக்காட்டி நிற்கின்றன. ஏனெனில் மெய்யுலகில் சர்வதேச வர்த்தகத்தில் பல நாடுகள், பல பொருட்கள் சம்பந்தப்படுகின்றன. "Bertin Ohlin" கருத்துப்படி 2 x 2 x 1 மாதிரியானது சாத்தியமற்றதே. ஏனெனில் உற்பத்தி செலவுக்கு வட்டிவீதம், போக்குவரத்து, மூலப்பொருள், நிலம், ஊழியம் என்பன போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துவது போல சர்வதேச வர்த்தகத்திற்கும் உண்மையில் பல நாடுகள், நிறைய பொருட்கள் என்பன காணப்படும் என்றார்.

அனைத்துப் பொருள் உற்பத்தியிலும் சம அளவான காரணிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதனை இக்கோட்பாடு விளக்குகின்றது. ஆனால் இவ் எடுகோள் கோட்பாட்டினை நிலையியல் ஆய்விற்கு இட்டுச்செல்கின்றது. அதாவது வேறுபட்ட பொருள் உற்பத்திக்கு வேறுபட்ட காரணி அளவுகள் பயன்படுத்தப்படலாம். மேலும் நாட்டிற்குள் உற்பத்தி தொழிற்பாடு நடைபெறுகிறது என்பதும் இக்கோட்பட்டின் படி ஏற்க முடியாதது ஆகும். ஏனெனில் சர்வதேச வர்த்தகத்திற்கு தேவையான பொருட்கள் இறக்குமதி செய்யப் படுகின்றது. உதாரணமாக இந்தியாவின் ஆடை உற்பத்திக்கு டை, இயந்திரங்கள் என்பன ஜேர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப் படுகின்றன. எனவே ஜேர்மனியினதும், இந்தியாவின் ஊழியர்களும் இந்தியாவின் ஆடை உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றது.

தொழிநுட்ப மாற்றங்களை ஒப்பீட்டு நயக்கோட்பாடு அங்கீகரிக்க வில்லை. சர்வதேச வர்த்தகத்தில் தொழில் நுட்பம் பெரும் பிரதான பங்கினை இக்கோட்பாடு தவிர்த்துள்ளது. மெய்யுலகில் இன்று பெரும்பாலான நாடுகளில் தொழிநுட்ப முன்னேற்றம், மூலவளங்களின் அபிவிருத்தி என்பவற்றினால் உற்பத்தி தொழிற்பாடு மாற்றம் அடைகின்றது. கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் பொருளாதார சிக்கனங்களை ஏற்படுத்துகின்றது. மேலும் அபிவிருத்தி அடைந்த பல நாடுகளில் தொழிநுட்பமே உற்பத்தியில் செல்வாக்கு செலுத்தி நிற்கின்றது என்பதனை ஏற்கத்தான் வேண்டும். மேலும் பணப்பரிமாற்றம் இல்லை. பண்டமாற்று முறையிலேயே பரிமாற்றம் நடைபெறுவது. இக்கோட்பாட்டின் எடுகோளாகும். காரணம் பணப்பரிமாற்றம் காணப்படும்போது நாட்டிற்கு நாடு வேறுபட்ட நாணய அலகுகள் பயன்படுத்தப்படும் போது நாணயப் பெறுமதி இறக்கம் ஏற்படும் என இக்கோட்பாட்டு விளக்கம் தருவது மெய்யுலகில் இது பிரயோகத்தன்மையை இழக்கின்றது என்றே கூறலாம்.

மேலும் நாடுகளுக்கிடையில் சுதந்திரமான வர்த்தகம் காணப்படுகின்றது என்றும், நிறை தொழில்மட்டம் காணப்படுகின்றது போன்ற எடுகோள்களும் நடைமுறை வர்த்தக வடிவங்களிலிருந்து கோட்பாட்டினை வேறுபடுத்து கின்றது. உலகில் இன்று நாடுகள் சுதந்திர வர்த்தகத்தில் ஈடுபடுவதில்லை. தீர்வை, வரி, ஒப்பந்தம் என்பனவற்றின் மூலமும், பொருட்கள் ஓரினத்தன்மையற்றும் சர்வதேச வர்த்தகம் நடைபெறுகின்றன. மேலும் உள்ளூர் உற்பத்தியை பாதுகாக்க இறக்குமதி கட்டுப்பாடுகளைக் கொண்டும் சர்வதேச வர்த்தகத்தினை நடாத்துவதனைக் கண்டு கொள்ளலாம். எனவே இவ்வாறான நடவடிக்கை சர்வதேச வர்த்தகத்தின் மூலமான சிறப்புத்தேர்ச்சி அடைகின்ற நன்மைகளினை குறைக்கவே செய்கின்றன.

மேலும் இக்கோட்பாட்டில் நிறைதொழில்மட்டம் என்ற எடுகோள் அர்த்தமற்றது ஆகும். ஏனெனில் எந்த நாட்டிலும் நிறைதொழில் காணப்படுவது என்பது வெறுமனே பேனா எழுத்து மட்டும்தான் (Unrenlist Assumption of Full Employment). நிறைதொழில்மட்டம் நாடுகளில் காணப்படுவதில்லை. என்பதனை ‘‘கெயின்ஸ்’’ நிரூபித்தார். மேலே ஒப்பீட்டு நயக்கோட்பாட்டின் எடுகோள்கள் குறித்த குறைபாடுகளையும், சில எடுகோள்களின் பயன்பாடுபற்றியும் நுணுக்கமாக பரிசீலனை செய்யப்பட்டது. இக்கோட்பாட்டின் எடுகோள்கள் பல பொருளியாலாளர்களினால் விமர்சிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டதனால் சில எடுகோள்கள் இக் கோட்பாடு குறித்து கைவிடப்பட்டுள்ளன. அல்லது மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அவையாவன : இரண்டிற்கு மேற்பட்ட நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன. இரண்டிற்கு மேற்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன, ஒன்றிற்கு மேற்பட்ட உற்பத்திக்காரணிகள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றன. மாறும் அளவுத்திட்ட விதியை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படுகிறது, விலையில் போக்கு வரத்துச் செலவும் உள்ளடக்கப்பட்டிருத்தல் என்பனவாகும். மேலும் எடுகோள்கள் குறித்து விமர்சிக்கப்பட்டாலும் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு சர்வதேச வர்த்தகத்தின் மூலம் பல பயன்பாடுகளையும் கொண்டு காணப்படுகின்றது.

ஒப்பீட்டு நயக்கோட்பாட்டின் விளக்கம் ஆனது மெய் உலகத்தின் அதன் பிரயோகத்தன்மை குறித்து பரிசீலனை செய்யும் போது சிறப்புத்தேர்ச்சி பற்றிய கோட்பாடு விளக்கம் போதுமானவையானது அல்ல. (Impossibility of Complete Specialisation) இதுபற்றி "Frank Graham" குறிப்பிடும் போது பூரணமான சிறப்புத்தேர்ச்சி என்பது சாத்தியமற்றது என்பதனை சுட்டிக்காட்டினார். ஆதாவது A சிறிய நாடு, B பெரிய நாடு எனின் A என்ற சிறிய நாடே சிறப்புத்தேர்ச்சி அடைகின்றது என்றும், B நாடு அடைய முடியாது எனவும் வாதிக்கின்றார். ஏனெனில் A நாடு குறைந்த காரணிகளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அனைத்தும் B நாட்டில் சந்தைப்படுத்தப் படுகின்றன. ஆனால் B நாட்டின் அனைத்து தேவைகளையும் அப்பொருள் குறித்து பூர்த்தி செய்யமுடியாது அவ்வாறே B நாடு அதிகளவான உற்பத்திக் காரணிகளைக் கொண்டு அதிகளவு உற்பத்தி செய்கின்றன. ஆனால் B நாட்டின் உற்பத்திப் பொருளுக்கான சந்தைவாய்ப்பு A நாட்டில் குறைவாகும். காரணம் உற்பத்தி மிகையினை சிறிய நாடு உள்வாங்காது. எனவே A நாடே சர்வதேச வர்த்தகத்தின் மூலம் சிறப்புத்தேர்ச்சி அடைகின்றது. மேலும் மெய்யுலகில் பெறுமதி கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் நாடு சிறப்புத்தேர்ச்சி அடையலாம். ஆனால் பெறுமதி குறைந்த பொருட்களை உற்பத்தி செய்யும் நாடு சிறப்புத் தேர்ச்சியடைய முடியாது. எனவே சிறப்புத் தேர்ச்சி பற்றிய விளக்கத்தினை தந்த இக் கோட்பாட்டு நடைமுறை உலகிற்கு பிரயோகிக்கக் கூடிய முறையில் முழுமையாக ஆக்கம் செய்யப்படவில்லை.

இக் கோட்பாட்டில் ஒப்பீட்டுச் செலவு ஏன் வேறுபடுகினறது என்பதனை இக் கோட்பாடு விளக்கவில்லை. இதனை ஹெக்கர் _ ஒலின் கோட்பாடே விளக்கி நிற்கின்றது. றிக்காடோ நாடுகளுக் கிடையேயுள்ள ஊழியத்திறமையே காரணம் என விளக்கியுள்ளார். ஆனால் இதற்கான தெளிவான விளக்கம் ஹெக்கர் _ ஒலினால் விளக்கப்பட்டுள்ளது. மெய்யுலகில் காரணி அளிப்புக்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. மேலும் வேறுபட்ட பொருட்கள், வேறுபட்ட உற்பத்திக்காரணிகளின் விகிதாசாரத்தை வேண்டி நிற்கின்றன. (உதாரணமாக செங்கல் உற்பத்தியும், கொம்பியூட்டர் உற்பத்தியும்) எனவே இதற்கான தெளிவான விளக்கம் இல்லாத போது நடைமுறையில் இதன் பயன்பாட்டு சக்தி குறைகின்றது.

இக் கோட்பாடு சர்வதேச வர்த்தகத்தின் போது காரணிகளின் விலை, வருமானம், பங்கீடு என்பனவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பற்றி எதுவும் கூறவில்லை. ஆனால் சர்வதேச வர்த்தகத்தினால் ஏற்படும் நன்மைகளினைப் பற்றி குறிப்பிடுகின்றது. ஒப்பீட்டு நயக்கோட்பாடு ஆனது வர்த்தகமாற்று வீதத்தை எது தீர்மானிக்கின்றது என்பதனை குறிப்பிடவில்லை. அதாவது என்ன பொருள் ஏற்றுமதிக்கு, என்ன பொருள்

இறக்குமதி என்று விளக்குகின்றது. ஆனால் அது என்ன மாற்றுவீதத்தில் என்ன அளவு ஏற்றுமதி செய்யும் பொருளுக்கு என்ன அளவு இறக்குமதி செய்ய வேண்டும் என்று குறிப்பிடவில்லை. மேலும் ‘‘Gunnar Myrdal’’ என்பவர் இக்கோட்பாடு வாழ்க்கையின் யதார்த்தத்தைவிட தனிமையான போக்கினைக் கொண்டுள்ளது. சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்த, அடையாத நாடுகளின் சமமின்மை கருத்திற் கொள்ளப்படாமை, பொருளின் உற்பத்தி அளவு, வர்த்தக நன்மைகள் ஆகியன எந்தளவிற்கு மாற்றததிற்குள்ளாகின்றன என்பதனைக் கருத்திற் கொள்ளப்படவில்லை என்றும் ஆனால் இக்கோட்பாடு வர்த்தகத்தினால் கிடைக்கும் நன்மைகள் என்ன? என்ன பொருளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற விடயத்தினை விளக்குகின்றது என்றார்.

மெய்யுலகில் இன்று சர்வதேச வர்த்தகமானது நாடுகளுக் கிடையில் இராணுவ நோக்கில் அல்லது கேந்திர நோக்கத்தில், அபிவிருத்தி நோக்கில் தீர்மானிக்கப்படுகின்றது. வெறுமனே ஒப்பீட்டு நயத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவது அல்ல. உதாரணமாக இந்தியா சனல் நாரினை (Rawjute)ஒரிசாவிலிருந்து பெற்றுக் கொள்கின்றது. ஆனால் ஒப்பீட்டு நயத்தின் அடிப்படையில் அயலில் உள்ள பங்காளதேசத்தில் இருந்து மலிவான விலையில் இறக்குமதி செய்யலாம். இச்செயற்பாட்டிற்கு காரணம் இந்தியாவின் இராஜதந்திரமே. எனவே ஒப்பீட்டு நயத்தை மட்டும் வைத்து சர்வதேச வர்த்தகம் தீர்மானிக்கப்படுவது சாத்தியமற்றதை கண்டு கொள்ளலாம்.

ஒப்பீட்டு நயக்கோட்பாடானது ஒரு பாரம்பரியமானது. ஏனெனில் இக்கோட்பாட்டு நிரம்பல் பக்கத்தை மாத்திரமே கருத்திற் கொண்டுள்ளது. (One Side theory) இது கேள்விப்பக்கத்தை புறக்கணித்துள்ளது. அதாவது உள்நாட்டில் கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றம் ஒப்பீட்டு நயத்தினையும் பாதிக்கலாம். மேலும் இதனடிப்படையில் இடம்பெறும் சர்வதேச வர்த்தகத்தினையும் பாதிக்கலாம். இக்கருத்தினை இக் கோட்பாடு உள்வாங்கவில்லை. அதாவது A நாட்டில் X பொருளுக் கான கேள்வித்தொகை அதிகரித்தால் விலையும் அதிகரிக்கும். அதே நேரம் கேள்வித்தொகை அதிகரிப்பால் ஏற்றுமதி குறையும், இதனால் சர்வதேச வர்த்தகம் பாதிப்படையும்.. எனவே இச் செயற்பாட்டினை புறக்கணித்து ஒரு பக்கத்தை மட்டும் கோட்பாட்டு விளக்கத்தில் புகுத்தியது மெய்யுலகில் இதன் நம்பகத் தன்மையை குறைக்கவே செய்கின்றது.

எனவே ஓப்பீட்டு நயக்கோட்பாடானது மெய்யுலக சர்வதேச வர்த்தகத்திற்கு பொருந்தாத எடுகோள்களையும், கோட்பாட்டு விளக்கத்தையும் கொண்டு நலப்பொருளியலை மாத்திரம் கருத்திற் கொண்டுள்ளது. ஆனால் எடுகோள்கள் என்பது கோட்பாட்டினை இலகுவாக்குவதற்கும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும் பொருளாதாரங்களில், பொருளாதாரக் கோட்பாடுகளில் கையாளப்படுகின்றன. எனவே எடுகோள்களினை விமர்சனப் படுத்துவதன் மூலம் இக்கோட்பாட்டினை வலுவிழக்கச் செய்ய முடியாது. மேலும் இக்கோட்பாடானது இன்னொரு கோட்பாட்டினால் பூர்த்தி செய்யவும் முடியாததும் ஆகும். எனவே இறுதியாக ஒப்பீட்டு நயக் கோட்பாடு ஆனது மெய்யுலக சர்வதேச வர்த்தகத்திற்கு உள்ளடங்காத ஒன்றாக காணப்பட்ட போதிலும் ‘‘ஒப்பீட்டு நயக்கோட்பாடு சர்வதேச வர்த்தகத்தினை

விளக்க உண்மைகள் நிறைந்த கோட்பாடாகும் '' என்ற சாமுவேல்சனின் கருத்துக்கு இசைவாக இக்கோட்பாடு ஆனது இன்னும் பல பொருளியலாளர்களினால் சீரமைக்கப் பட்டு சர்வதேச வர்த்தகத்தினை விளக்குவதற்கும், நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்யப்படல் வேண்டும்.

**References :**


- Ahuja H.L, (1993), Modern Micro Economics (7th ed) (Theoty and appl – Analysis of International Trade), S.chand and Company Ltd, Newdelhi.pp.649 – 659
- Alan Anderton, (1997), Economics, Causeway Press. pp.530 – 533
- Barry Harrison, Charles Smith and Brinley Davies, (1992), Introductory Economics, Macmillan Press Ltd, London. Pp.282 – 287
- Bo So Dersten and Geoffrey Reed, (1994), International Economics, (3rd ed), Macmillan Press Ltd, London. pp. 3-5
- D.N.Dwivedi, (1987), Micro Economic Theory, (3rd ed) Vikas publishing House Pvt Ltd, Delhi. pp.592 – 596
- Dennis R. Appleyard Alfred J. Field, (1995), International Economics, (Trade Theory and Policy) McGraw Hill, New Delhi.pp.29 – 41
- Dewett K.K and J.D.Varma, (1995), Elementary Economics Theory, S.Chand $ Company Ltd, Newdelhi.pp.432 – 442
- Gameshan Wignaraja, (1998), Trade Liberalization in Sri Lanka, Macmillan Press Ltd, London.pp.15 –16
- Jhingam M.L, (1993), Micro Economic Theory, Konark Publishers Pvt . Ltd, Delhi.pp.711 – 718
- Peter B.Kenen, (1985), The International Economy, prentice Hall Inc.USA.pp.16 – 43
- Peter H.Lindert, (1991), International Economics, (8th ed) Irwin, Delhi.pp.15 – 30
- Richard G.Lipsey and Colin Harbury, (1992), First Principles of Economics, EL.BS, London.pp.209 – 214